முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,
முதன்மை சார்பு நீதிபதி.
**HMOP. No.147/2024**

| எ.ம.சா.1 | | தேதி.12.03.2026. | |
|---|---|---|---|
| பெயர் | குருமூர்த்தி | த/பெ. | காத்தான் |
| வயது | 41 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் எதிர்மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

__மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை__:—

நானும் எதிர்மனுதாரரும் காதலித்துதான் திருமணம் செய்துகொண்டோம் என்றால் சரிதான். நாங்கள் எங்களது பெற்றோர்களின் எதிர்ப்புக்கு இடையே தான் எங்கள் திருமணம் நடந்தது. எனக்கு மனுதாரருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாகத்தான் இந்த விவாகரத்து மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது குழந்தை மனுதாரரிடம் இருப்பது எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. நான் குழந்தையை பார்க்க வேண்டும் என்ற ஆவலை நீதிமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். விவாகரத்து வழங்க நானும் உடன்படுகிறேன் என்றால் சரிதான்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.